செய்தி வெளியீடு எண். 212 நாள்: 20.04.2017

## திருவள்ளுர் மாவட்டத்தில் பழைய குடும்ப அட்டைக்கு பதிலாக மின்னணு குடும்ப அட்டைகளை கைப்பேசிக்கு வரும் 8 இலக்க குறுஞ்செய்தி மூலம் பெற்றுக்கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

~~~~~

தற்போது புழக்கத்தில் உள்ள குடும்ப அட்டைக்கு பதிலாக மின்னணு குடும்ப அட்டை (Smart card) (01.04.2017 முதல் வழங்கப்பட்டு வருகின்றது. புதிய மின்னணு அட்டை அச்சிடப்பட்ட விவரம் குடும்ப அட்டைதாரார்களின் செல்லிடப்பேசிக்கு கீழ்க்கண்ட வடிவத்தில் தமிழில் குறுஞ்செய்தி மூலம் தகவல் அனுப்பி வைக்கப்படும்.

தங்களது **மின்னணு குடும்ப அட்டை (Smart Card)** அச்சிடப்பட்டுள்ளது. **அதற்கான ரகசிய குறியீட்டு எண் (8 இலக்கம் )** விவரங்களுக்கு ரேஷன் கடையை அணுகவும்.

என குறுஞ்செய்தி வரும், குறுஞ்செய்தி வரப்பெற்ற 15 நாட்களுக்குள் அதனை அழித்துவிடாமல் பழைய குடும்ப அட்டை (ம) கைபேசி குறுஞ்செய்தியுடன் உடனடியாக சம்பந்தப்பட்ட நியாய விலைக்கடையில் பதிவு செய்து புதிய மின்னணு அட்டை பெற்றுக் கொள்ளலாம்.

மின்னணு குடும்ப அட்டையில் சேர்த்தல், நீக்கல், முகவரி மாற்றம், புதிய குடும்ப அட்டை போன்ற அனைத்தும் இ-சேவை மையங்களில் www.tnpds.gov.in என்ற வளைதளத்தில் உள்நுழைவு செய்து பதிவு செய்து கொள்ளலாம். கைபேசி எண்கள் இதுவரை குடும்ப அட்டையுடன் இணைக்காதவர்கள் உடனடியாக தங்களது பயன்பாட்டிலுள்ள கைபேசி எண்ணை குடும்ப அட்டையுடன் இணைத்து பதிவு செய்து கொள்ள வேண்டும். ஏற்கனவே, தவறுதலாகவோ அல்லது மூன்றாம் நபரின் மொபைல் எண் பதிந்திருந்தாலோ அதனை உடனடியாக மாற்றிட சம்பந்தப்பட்ட வட்ட வழங்கல் அலுவலர்களை அணுகி சரியான எண்ணை பதிவு செய்து கொள்ளுங்கள்.

குடும்ப அட்டைதாரா;கள் எவரேனும் கவனக் குறைவாக கைபேசி எண்ணிற்கு வரப்பெற்ற எட்டு இலக்கு OTP எண்ணை அழித்து விட்டாலோ அல்லது தானே அழிந்துவிட்டாலோ 1967 என்ற இலவச இணைப்பு எண்ணை தொடர்பு கொண்டு தீர்வு காணலாம்.

இந்த அரிய வாய்ப்பினைப் பயன்படுத்தி அனைத்து பொதுமக்களும் ஸ்மார்ட் கார்டு பெற்று பயன்பெற வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொள்கிறார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளுர்.**
~~~~~